ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2371/13 - 2024 පෙබරවාරි මස 13 වැනි අඟහරුවාදා - 2024.02.13
*2371/13 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 19/78* (VII)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ
நீதி, சிறைச்சாலை அலுவல்கள்
மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

கொழும்பு
2024 ஆம் ஆண்டு பெப்புருவரி 12.

**ஒழுங்குவிதிகள்**

2023 ஆம் ஆண்டு நவெம்பர் 27 ஆந்தேதிய 2360/ 22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்கு விதிகள், அதன் 2 ஆம் ஒழுங்குவிதியில் அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழ் ஏலவே ஆக்கப்பட்ட ஏதேனும் நியமனத்திற்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி, "(ஐ) க.பொ.த சாதாரண தர பரீட்சையில்" எனும் சொற்கள் தொடங்கி "அமைச்சர் நியமிக்கலாம்: அத்துடன்" என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஐ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த சதாரண தரப் பரீட்சையில் இரண்டு விசேட சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்துள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு விசேட சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடையாதுள்ள ஆளொருவர் சமுதாயத்திற்கு அளிக்கப்பட்ட அத்தகைய ஆளினது உன்னதமான சேவையை கவனத்திற்கொண்டு சமாதான நீதவானொருவராக நியமிக்கப்படுவதற்கு அத்தகைய ஆள் பொருத்தமானவரென உறுதிப்படுத்தி எவரேனும் புகழ்பெற்ற மதத்தலைவரினால், அத்தகைய ஆளினது உள்ளூர் சமுதாயம் பற்றிய ஏதேனும் கழகத்தின், சேவையின் அல்லது சமூகத்தின் தலைவரினால் அல்லது தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரையினைக் கவனத்திற்கொண்டு அமைச்சரினால் நியமிக்கப்படலாம் : அத்துடன்".

EOG 02 - 0093

1A – G6642 – 326(2024/02)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.